ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2343/12 - 2023 අගෝස්තු මස 02 වැනි බදාදා - 2023.08.02

2343/12 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: GCF/ATH/NG/50/LR.
காணி அமைச்சின் இல.: L/03J/94/LRB/160.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

(பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப் படுத்தல் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத் திட்டத்தின் கீழ், நீர்த் தேக்கப் பிரதேசத்திற்கான காணி எடுத்துக் கொள்ளல்)

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலாளர் பிரிவில் இல. 514A - வெலிக்கடை மேற்கு கிராம அலுவலர் பிரிவில் வெலிக்கடை கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2017.11.22 ஆந் திகதிய கொ:9709 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1, 2 எனக் காட்டப்பட்ட 0.5784 ஹெக்டயார் முழு விஸ்தீரண முடைய கீழ் விபரிக்கப்பட்ட இரண்டு (02) காணித் துண்டுகள்:

**1. துண்டு இல. 1**

காணியின் பெயர்: ஆரச்சிய கும்புர; விபரம்: திறந்த தரிசு நிலமும் சதுப்பு நிலமும் தற்காலிகக் கட்டிடமொன்றும் 17 தற்காலிகக் கட்டிடங்களின் பகுதிகளும் காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: - ; விஸ்தீரணம்: 0.0510 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 2**

காணியின் பெயர்: ஆரச்சிய கும்புர; விபரம்: திறந்த தரிசு நிலமும் சதுப்பு நிலமும் 23 தற்காலிகக் கட்டிடங்களும் 16 தற்காலிகக் கட்டிடங்களின் பகுதி களும் காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: சங்.பட்டுகம் பொல இந்திரசிறி தேரோ; விஸ்தீரணம்: 0.5274 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு இராஜகிரிய, வெலிக்கடை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 இல் அமைந் துள்ள இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத் தாபனத்தின் பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற் கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எச். திலக்கவர்தன,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக்
கட்டுப்படுத்தல் மற்றும் சுற்றாடல்
மேம்படுத்தல் கருத்திட்டம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே
பிரதேச செயலாளர் பிரிவு.

பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக்
கட்டுப்படுத்தல் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல்
கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,
இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்,
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய,
2023, யூலை 26.

EOG 08 - 0001